# HDFC BANK

நான்கு தசாப்தங்களாக பல்வேறு நிதித் தீர்வுகள் ஊடாக இலங்கை மக்களின் வீட்டு கனவை நிறைவேற்றுவதோடு வர்த்தக சமூகத்தினருக்கு நிதி உதவிகளை அளித்து நாட்டின் நலனுக்காக தம்மை அர்ப்பணித்துள்ள வங்கியுடன் உங்களின் வங்கியியல் தொழிலை உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்கான அரியதொரு வாய்ப்பு கிட்டியுள்ளது.

HDFC வங்கியில் கீழ் காணும் பதவிகளுக்கு திறமையான, செயல்திறன் மிக்க சாதகமான நோக்கை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**மென்பொருள் பொறியியலாளர், தரம் III (2) - (02 வெற்றிடங்கள்)**
**SOFTWARE ENGINEER, GRADE III (2) - (02 VACANCIES)**

## பிரதான பொறுப்புகள்:

- பொறியியற் கோட்பாடுகள் முறைமையாக்க மொழி தொடர்பான அறிவை பயன்படுத்தி HDFC வங்கிக்கு மென்பொருள் தீர்வுகளை கட்டியெழுப்புதல், கணினி மென்பொருள் உள்ளீடுகளை உருவாக்குதல், அபிவிருத்தி செய்தல், பராமரித்தல், பரிசோதித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- மென்பொருள் குறைபாடுகளை மேற்பார்வை செய்து அவற்றை சரி செய்து கட்டமைப்புகளை பேணுதல்.
- புதுப்பிக்க வேண்டிய துறைகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் அடையாளங் காண்பதன் மூலம் தற்போதுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்.
- அலுவலகங்களுடன் தொடர்புடைய தகவல்கள், தொழில்நுட்ப பிரச்சனைகள் தொடர்பாக ஆராய்தல் மற்றும் தேவைக்கேற்ப அவற்றை தீர்ப்பதற்கு ஒத்துழைப்பு அளித்தல் .
- தேவையான சந்தர்ப்பங்களில் இறுதி பயன்படுத்துவோர் பயிற்சியை அளித்தல் .

## தகைமைகள்

- கணினியியல் துறை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல் மற்றும் கணினி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 05 ஆண்டு கால அனுபவத்தை கொண்டிருத்தல்.
  அல்லது
- கணினியியல் தொடர்பாக குறைந்தபட்சம் ஓராண்டுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமாவுடன் கணினி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 06 ஆண்டு கால அனுபவத்தை கொண்டிருத்தல்.

- Java, dotNet, Mobile Application, C# மற்றும் Oracle SQL's ஐ பயன்படுத்தி வங்கியியல்/ நிதி நிறுவனமொன்றில் மென்பொருள் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்துள்ளமை மேலதிக தகைமையாக கருதப்படும்.

**வயதெல்லை : 35 வயதை விட குறைவாக இருத்தல் வேண்டும்.**

## உதவி சட்ட உத்தியோகத்தர், தரம் III (3) – பதுளை கிளை
## ASSISTANT LEGAL OFFICER, GRADE III (3) – BADULLA BRANCH

**அடிப்படை பொறுப்புகள்**

**வழக்கு நடவடிக்கைகள்**

- அறவிடல் செயற்பாடுகளுக்கு ஏற்புடைய சட்ட நடவடிக்கைகள் மற்றும் இதர சகல ஆவணங்களையும் தயாரித்தல், தாக்கல் செய்தல் மற்றும் வங்கி சார்பாக நீதிமன்றங்களிலும் தீர்ப்பாயங்களிலும் தோற்றுவதன் மூலம் அறவிடல் நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய சட்ட நடவடிக்கைமுறைக்கு தேவையான வசதிகளை மேற்கொள்ளுதல்

**உறுதிகளை இயற்றுதல்**

- வாடிக்கையாளர்கள் சமர்ப்பிக்கும் பிணை ஆவணங்களின் சட்ட ரீதியான உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் உரித்து அறிக்கைகளை தயாரித்தல்.
- பிணைகள் மற்றும் இதர சட்ட ஆவணங்களை இயற்றுதல், மீளாய்வு செய்வதோடு உறுதிப்படுத்தல்.
- வங்கி உத்தரவிடும் இதர எல்லா வகை சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்

**இதர கடமைகள்**

- ஏற்புடைய நீதிமன்றங்கள், காணிகளை பதிவு செய்யும் நிறுவனங்கள், வாடிக்கையாளர்கள், வங்கியின் கிளை அலுவலகங்கள் மற்றும் உள்ளக திணைக்களங்களுடன் இணைந்து பணியாற்றுதல்.

**தகைமைகள்**

- சட்டத்தரணி மற்றும் பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ்
- ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் கடமை புரிவதற்கான பிரதேசத்துக்குரிய நொத்தாரிஸ் உரிமப்பத்திரம்
- சட்டத்தரணியாக தகைமை பெற்ற பின்னர் கீழ் காணும் துறைகளில் குறைந்தபட்சம் 03 ஆண்டு அனுபவத்தை கொண்டிருத்தல்.
  - வழக்கு நடவடிக்கைகள் - நிதிச் சேவைக்கு ஏற்புடைய (பணம் மீள அறவிடல், அடகு நடவடிக்கைகள்)

- உரித்து நடவடிக்கைகள் - நீதிமன்ற நடவடிக்கைகள், காணி பதிவு தேடல்கள், சகல உரித்துகள் மற்றும் சட்ட ஆவணங்களை ஆக்குதல்.

- கடன் மீள அறவிடல் மற்றும் வங்கியியல், வணிகச் சட்டம், கணினி அறிவு மற்றும் திறன்மிக்க தொடர்பாடல் ஆற்றலை கொண்டிருத்தல்.

**வயதெல்லை** : 45 **வயதுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்**.

**பதவிக்குரிய விதிகளும் நிபந்தனைகளும்**

இந்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் வேட்பாளர்கள் முதலில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு சிறந்த செயலாற்றுகையின் பேரில் அவர்கள் நன்னடத்தை காலப்பகுதிக்கு உட்படுத்தப்படுவார்கள்

## தங்க சரிபார்ப்பு உத்தியோகத்தர் (ஆண்) – தரம் IV (04 வெற்றிடங்கள்)
## GOLD VERIFICATION OFFICER (MALE) – GRADE IV (04 VACANCIES)

**பிரதான பொறுப்புகள்**

- தங்க ஆபரணங்களின் உண்மைத்தன்மையை அறிந்துகொள்ளுதல்
- தங்க ஆபரணங்களுக்கு சரியான பெறுமதி வழங்கப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தல்.
- தங்கக் கடன்களுடன் தொடர்புடைய கொள்கைகள், நடவடிக்கைமுறைகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை பின்பற்றுதல்
- வங்கியின் தங்க கடன் உடைமையை ஏற்புடைய கரட் பெறுமதியுடன் உறுதிப்படுத்தல்.
- தங்க ஆபரணங்களை சரிபார்ப்பதற்கு தொடர்ச்சியாக நாடெங்கிலுமுள்ள கிளை அலுவலகங்களுக்கு செல்ல வேண்டியது கட்டாயமாகும்.
- தங்க ஆபரணங்களை சீரான முறையில் காப்பு பெட்டகத்தில் இடப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தல்

**தகைமைகள்**

- க.பொ.த உயர் தரப் பரீட்சையில் 03 சித்திகளை பெற்றிருத்தல் (ஆங்கிலம் தவிர).
- அடகு தங்கக் கடனுடன் தொடர்புடைய துறையொன்றில் 05 ஆண்டு கால அனுபவத்தை கொண்டிருத்தல்.
- தங்க கடன் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான அனுபவத்தை கொண்டிருத்தல்.
- தங்க சரிபார்த்தல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெறப்பட்ட பயிற்சி சான்றிதழ் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- அனுபவத்துடன் தங்கத்தின் தரத்தை அறிந்து கொள்வதற்கான ஆற்றலை கொண்டிருத்தல்.
- MS Office தொடர்பான அறிவை கொண்டிருத்தல்.

- ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியை கையாள்வதற்கான ஆற்றலை கொண்டிருத்தல்.

**வயதெல்லை** : 45 **வயதுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.**

**கவர்ச்சிகரமான ஊதியங்களும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.**

## விண்ணப்பிக்கும் செயன்முறை

மின்னஞ்சலின் விடய வரிசையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 07.02.2024 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் careers@hdfc.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் விபரங்களுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு கோரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவத்தை கொண்டிராத நபர்களுக்கு இந்த பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.

ஏற்புடைய தகைமைகளை பூர்த்தி செய்யாத நபர்களின் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைத்த விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சையின் போது ஏற்புடைய கோப்புகளின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தவறும் விண்ணப்பதாரிகள் எக் காரணத்தினாலும் மேற்படி பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

எந்தவொரு அழுத்தம் பிரயோகித்தலும் இப் பதவிக்கான தகைமை இழப்பாக கருதப்படும்.

ஆட்சேர்ப்புகளை பிற்போடுவதற்கான அல்லது ரத்துச் செய்வதற்கான உரிமை HDFC வங்கிக்கு உண்டு. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆட்சேர்ப்பு செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள்.

**உதவிப் பொது முகாமையாளர் – மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்**
HDFC **வங்கி,**
**த.பெ. இல** 2085,
**சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு** 02
**தொலைபேசி இல** – 0112 356800 – **இணைய தள முகவரி** : www.hdfc.lk